



# 180th Aniversary

# Memorial Speech

## PRIZE DAY - 2017

12th June 2017

# பரிசளிப்பு விழா நினைவுப் பேருரை

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

## J/Manipay Memorial English School

**பரிசுத் தினம்**

2017 ஜூன் 12

**திங்கட்கிழமை**

**பி.ப. 2.00 மணி**

# அறிவுசார் சமூகத்திற்காகப் பாடசாலைகளை நவீனமயமாக்களினூடாக மாணவர்களின் தேர்ச்சிகளை விருத்தியாக்கல்


**கலாநிதி. பாலசுப்பிரமணியம் தனபாலன்**

உபபீடாதிபதி

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

நிபுணத்துவ ஆலோசகர்

சமய விழுமியப்பிரிவு கல்வியமைச்சு,

பத்திரமுல்ல.

# யா/ மெமோரியல் ஆங்கில பாடசாலை
# பரிசளிப்பு விழா நினைவுப் பேருரை
# 12th June 2017

## அறிவுசார் சமூகத்திற்காகப் பாடசாலைகளை நவீனமயமாக்களினூடாக மாணவர்களின் தேர்ச்சிகளை விருத்தியாக்கல்

மனிதத்துவ விடுதலைக்கான புரட்சிகரக் கருவி கல்வியே ஆகும். கல்வியே அபிவிருத்தியின் அச்சாணி. அறிவுச் சமூகமாக மாறிவரும் இன்றைய உலக சூழலில்; அறிவுச் சமூகத்தின் நான்கு தூண்களான;

1. கல்வி கற்ற மனித வளம்
2. நல்லாட்சி
3. புத்தாக்கமும் ஆய்வும்
4. தகவல் தொழில்நுட்பக்கட்டமைப்பு

என்பவற்றை மையமாகக்கொண்டு எமது மண்ணில் கல்வித்துறையை விரைவாக வளர்ச்சியடையச் செய்ய வேண்டும். இவ்வகையில் கடந்த நூற்றி எண்பது வருடங்களுக்கும் மேலாக மானிப்பாய் மண்ணில் யா/மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை கல்விச் சேவையாற்றி வருகின்றது.

இங்கு பயின்ற மாணவர்கள் பல சாதனை வீரர்களாக எம் மண்ணில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்கள். யாருக்கு எந்த நேரத்தில் கல்வி வழங்க வேண்டும் என்பதற்கிணங்க இப்பாடசாலை கல்வியை வழங்கி மாபெரும் கல்விப் புரட்சியைச் செய்து வருகின்றது.

இன்று இதற்கான அர்ப்பணிப்புக்களை வழங்கி வரும் இப்பாடசாலையின் அதிபர் உயர் திரு.ஆ.பேரின்பநாயகம் அவர்களைப் பாராட்டுகின்றேன்.

பல்வேறு தேவையுடைய பிள்ளைகளுக்கு அப்பாவாக, அம்மாவாக, இறைவனாகவே இருந்து நல்வழிகாட்டி வருகின்றார். ஒரு இணக்கமான சூழ் நிலையை முகாமைத்துவத்தில் ஏற்படுத்தி ஆசிரியர்களும், பெற்றோர்களும் இணைந்து எமது எதிர்காலச் சந்ததிகளான இப்பிள்ளைகளுக்கான கல்வித் தேர்ச்சியை வழங்க பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்.

ஒரு முன்மாதிரி அதிபர் வகிபங்கை சாதுரியமாக வெளிப்படுத்தி பல சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றிகரமாக இக்கல்லூரியை இயக்கி வருகின்றார். அவரது அர்ப்பணிப்பான கல்விச் சேவை போற்றுதலுக்குரியது அத்தோடு இங்கு கற்பிக்கும் ஆசிரியர்களின் அர்ப்பண சேவையைப் பாராட்டுகின்றேன்.

மாற்றத்திற்கும் அபிவிருத்திக்குமான மிகவும் சக்தி மிக்க கருவி கல்வியாகும். 21 ஆம் நூற்றாண்டின் கற்றல் சட்டகவமைப்பு (P 21 century Learning Framework) கற்றல் பேறுகளை அறிவிலிருந்து திறன்களாகவும், மனப் பாங்குகளாகவும் மாற்றுவதற்கு பாடசாலைகளே நிலைக்களனாகும்.

இவை இங்கு மூன்று முக்கிய தேர்ச்சிகளாக இனம் காணப்படுகின்றன.

I. வாழ்க்கைத்திறன்கள்-தொழிற்திறன்கள் உள்ளடக்கிய தேர்ச்சிகள்.
II. தகவல் தொழில்நுட்பத் திறன்களும், ஊடகத்திறன்களும் கொண்ட தேர்ச்சிகள்.
III. 4Cகள் - பகுத்தாய்வுச் சிந்தனைத்திற்கள் (Critical thinking) கூட்டு இணைவுத் திறன்கள் (Collaborative Skills) தொடர்பாடல்

திறன்கள் (Communication Skills) ஆக்கத்திறன்கள் (Creativity Skills) உள்ளடக்கிய தேர்ச்சிகள்.

இதற்கான கருத்து கற்றலுக்காக நாம் இனம் காணும் சகல உள்ளடக்கமும் வாழ்க்கைத் திறன்களுடனும் தொழிற் திறன்களுடனும் தொடர்புபட்டிருக்க வேண்டும் என்பதாகும். எனவே இன்றைய அறிவு மைய சமூகத்தில் தொழிற் கல்விக்கான தேர்ச்சிகளை வழங்குதல் முதன்மை பெறுகின்றது.

பாடசாலைக்கலைத் திட்டத்திலேயே இதற்கான ஏற்பாடுகள் படிப்படியாகச் செயற்படுத்தப்படுவதுடன் தேசிய தொழிற்பயிற்சி தேர்ச்சிச் சான்றிதழையும், தொழிற் பயிற்சி தேர்ச்சிகளையும் பாடசாலையில் கல்வி பயின்று கொண்டே கற்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பயன்பாட்டு வாதக் கல்வியே இன்று முதன்மை பெறுகின்றது. "ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது" என்பது எமது முன்னோர்களின் பழமொழி இதனையே இன்றைய நவீன கல்வியின் பிரயோகமாக உள்ளது.

எமது பாடசாலைகளை இதற்கமைய நவீனப்படுத்த வேண்டியுள்ளது. இதற்குப் பொருத்தமான பௌதீக வளங்கள் மனிதவளங்கள், நிதி வழங்கள் தேவையாகவுள்ளன. இவ்வளங்களை முறையாக முகாமைப்படுத்தும் அறிவும் ஆற்றலும் கொண்ட கல்வி முகாமையாளர்களும் தலைமைத்துவ ஆற்றல் உள்ளோரும் முறையான ஆதரவை வழங்க வேண்டும்.

"எமது எதிர்காலச் சந்ததிகளான இன்றைய மாணவர்கள் தமது எதிர்காலத்தில் நல்வாழ்வு வாழத் தேவையான அனைத்துத் தேர்ச்சிகளையும் பாடசாலைகள் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு இன்றைய பாடசாலைகள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

அதற்கு;

1. முகாமைத்துவ ரீதியில் பாடசாலைகளையும் அதிபர்களையும் வலுவூட்டல் பாடசாலை முகாமைத்துவ அதிகாரத்தைப் பாடசாலைகளுக்குக் கையளித்தல். பாடசாலைகள் தம்மைத் தாமே முகாமை செய்ய வாண்மைப்படுத்தல். அதிபர்களைக் கலைத்திட்ட இயக்கத்தில் கூடுதலாக ஈடுபடவைத்தல்.
2. பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களைத் தீர்த்தலும் அவர்களை வலுப்படுத்தலும். ஆசிரியர்கள் உள்ளீடுகளை விடுத்து மாணவர்களின் கற்றல் தராதரங்களில் அக்கறை செலுத்துதல். பெற்றோர்களுக்குக் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
3. இதனூடாக புறக்கணிக்கப்பட்ட, கற்றலில் பின்னடைவான, மீத்திறனுள்ள, விசேட தேவையுள்ள பிள்ளைகள் அனைவரையும் சிறுவர் நேய அடிப்படையில் உட்படுத்தல். கல்விக்குள் பிரவேசிக்கச் செய்து அவர்களின் அடைவ மட்டத்தையும், வாழ்க்கைத் தேர்ச்சித் திறன்களையும் விருத்தியாக்கல், தகவல் தொழில்நுட்ப அறிவை அனைத்து மட்டங்களிலும் விருத்தியாக்கல்.
4. கல்வித்துறையினதும், மாணவர்களினதும் கல்விப் பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க பல்மட்டக் கற்பித்தல், பரிகாரக்கற்பித்தல் செயல்நிலை ஆய்வு ஆகியவற்றைப் பிரயோகிக்கும் தேர்ச்சிகளை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்குதல்
5. மாணவர்மைய நேரான வகுப்றை முகாமைத்துவத்தைப் பிரயோகித்து எல்லா மாணவர்களையும் நெருக்கீடுகளில் இருந்து மீட்டு உள ஆரோக்கியமுள்ளவர்களாக்கிக் கற்பித்தல் நேரான முகாமைத்துவத்தைப் பிரயோகித்து பாடசாலை அதிபர்,

ஆசிரியர்களை நெருக்கீடுகளில் இருந்து மீட்டு வினைத்திறனாகப் பணியாற்ற வைத்தல்.

6. கல்வித்துறையினர், கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களின் பொருத்தமற்ற வேலைச்சுமையினால் ஏற்பட்டுள்ள அழுத்தங்களையும் அர்த்தமற்ற அதிகாரங்களையும் நீக்கி;

7.

  1. துணிவு : நாம் கல்வித்துறையிலும் எமது கடமையிலும் சரியான நடவடிக்கைகளை உடனே எடுக்கின்றோம்.
  2. அர்ப்பணிப்பு: நாம் எமது வாக்குறுதிகளை நிறைவேற்றி கடமைக்கு அப்பால் கல்விச் சேவை ஆற்றுகின்றோம்.
  3. நம்பிக்கை : கல்வித்துறையில் நாம் ஒருவரை ஒருவர் நம்பும் வகையில் கடமையுணர்வுடன் செயலாற்றி மாணவர்களுக்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் நம்பிக்கைத்துரோகம் செய்யாதிருப்போம்.
  4. பொறுப்புக்கூறல் : பாடசாலையில் பயிலும் அனைத்துப் பிள்ளைகளையும் நம் பிள்ளைகளாகக் கருதி அவர்களின் கல்வி வாழ்க்கை, தகுந்த தொழிலுக்கு வழிகாட்டல் எமது பொறுப்பாகும். நாம் இதில் நம்பத்தகுந்த பங்காளர்களாகப் பொறுப்புக் கூறுவோம். என்ற வகையில் எமது பிள்ளைகளுக்கு கல்வியையும் ஒழுக்கத்தையும் வழங்க வேண்டிய பாரிய பொறுப்பில் நாமனைவரும் இருக்கின்றோம்.

## நேரான வகுப்பறை முகாமைத்துவம்

அறிவுசார் சமூகத்திற்காகப் பாடசாலைகளை வினைத்திறனாக்க மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு மாணவர்களின் இயலுமைக்கும் ஏற்ப வினைத்திறனாகக் கற்பிப்பதற்கு நேரான வகுப்பறை முகாமைத்துவம் வழிகாட்டுகின்றது. உலகளாவிய ரீதியிலும் இன்றைய கல்வியின் முதன்மை எண்ணக்கருவாக நேரான வகுப்பறை முகாமைத்துவ எண்ணக்கருவே உள்ளது.

இதற்கு யுனிசெவ் நிறுவனத்தின் சிறுவர் நேய பாடசாலை அணுகுமுறை, கல்வியமைச்சின் உட்படுத்தல் கல்வி விரிவாக்கம், ஆசிரியர்கள், அதிபர்களுக்கான வாண்மைத்துவப் பயில்வுகளில் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கான உளவியல், ஆலோசனை வழிகாட்டல் செயன்முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆயினும் இன்றைய மாணவர்கள் பல நெருக்கீடுகளுக்கு உள்ளாக்கப்படுவதும், பொருத்தமான மாணவர் விரும்பும் வகையிலான கற்றலை ஆசிரியர்கள், பாடசாலை முறை வழங்காத பொருத்தமற்ற தண்டனை முறைகளைப் பிரயோகித்தல் எனப் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. மாணவர்களும் பல முரண்பாடுகள் உடையவர்களாக நடக்கின்றனர்.

நேரான வகுப்பறை முகாமைத்துவம் என்பது ஆசிரியர் உளவியல் ரீதியாக மாணவர்களைச் சரியாகப் புரிந்து கொண்டு அவர்களுக்கு ஏற்ப மகிழ்ச்சியாகக் கற்க வழிகாட்டுவதே ஆகும். இந்நிலையை ஆசிரியர் செயற்படுத்த வேண்டுமானால்

- வகுப்பறையில் வினைத்திறனாகவும் விளைதிறனுடனும் நேரான வகுப்பறை முகாமைத்துவத்தைக் கடைப்பிடிப்பதற்கான தேர்ச்சியும், திறன்களையும் ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டும்.
- நெருக்கீட்டுக்குள்ளான பிள்ளைகளில் நடத்தை மாற்றங்கள் இருக்கலாம் என்பதை ஆசிரியர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

- பிள்ளைகளின் நடத்தை பொருத்தமான வகையில் மாற்றப்பட வேண்டும் என்பதை அறிந்திருத்தல் வேண்டும்
- கவர்ச்சிகரமானதும் பயனுறுதி மிக்கதுமான கற்றல் - கற்பித்தல் திறன்களை வகுப்பறையில் பிரயோகிக்கும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும்.
- மாணவர்களின் நடத்தைப் பிரச்சினைகளை அவதானிக்கும்போது உடல் ரீதியான தண்டனை வழங்காது எவ்வாறு அவர்களைக் கையாளலாம் என்ற அறிவை ஆசிரியர் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

**நெருக்கீடுகளின் தாக்கங்களும் தீர்வுகளும்**

இன்றைய மாணவர்கள் அமைதியின்மை, மனஉழைவு, பலாத்காரம், ஏக்கம், அச்சம், கற்றலில் ஆர்வமின்மை, பதகளிப்பு, மனச்சோர்வு தாழ்வுச்சிக்கல், புறழ்வான நடத்தை விரக்தி, மூத்தோர் சொல் கேளாமை போன்ற பல பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர்.

இதற்கு வீட்டுச் சூழல் சார்பாகப் பின்வரும் காரணங்கள் எடுத்தியம்பப்படுகின்றன. வீட்டில் அன்பு கிடைக்காமை பாதுகாப்பின்மை, வருமானமின்மை, தவறான வழிநடாத்தல், பெற்றோர் பிரிவு, யுத்த பாதிப்புக்கள் இன்னும் அகதி முகாம் வாழ்வு, கடுமையான தண்டனைகள் என்பவையாகவுள்ளன.

மேலும் பாடசாலை சார்பான காரணிகளாக

ஆசிரியரின் அன்பு கிடைக்காமை,
கணிப்பு கிடைக்காமை,
புறக்கணிப்பு,
பொருத்தமற்ற தண்டனைகள்,
தவறான தீர்ப்புக்கு அளாதல்,
பொருத்தமற்ற முகாமைத்துவம்,
மாணவர் சார்பாக அக்கறையீனம்,

தனியார் வேறுபாடுகளுக்கு ஏற்ப பரிகாரக் கற்பித்தல் செய்ய முடியாத சூழல்,
பல்வேறு தரப்பினரும் பாடசாலை முறைமையில் பொருத்தமற்ற தலையீடுகள்,
சிறார்கள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படல்
கல்வி முகாமைத்துவ கட்டமைப்பு காலத்திற்கு ஏற்ற பொருத்தமான விதிகளை நடைமுறைப்படுத்த முடியாமை,
பொருத்தமற்ற முரண்பாடுகள்,
தண்டனை வழங்கலுக்கு மாற்றீடாக என்ன செய்யலாம் என்பது தெரியாத நிலை,
மூத்தோரின் தவறான முன்னுதாரணங்கள்(ஊழல், பொய்,களவு)
பாடசாலை மாணவர் சார்பான நலனோன்பில் அக்கறையின்மை

போன்ற காரணிகளால் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். பாதிப்பிலிருந்து காப்பாற்ற வேண்டிய சூழலில் பாதிப்பை ஏற்படுத்தல் பெரும் பின்விளைவுகளுக்கு காரணமாகலாம்.

இன்று அனைத்து மட்டங்களிலும் முரண்பாடுகள் கல்வி அபிவிருத்திக்கும், வினைத்திறனான கற்றல் கற்பித்தலுக்கும் தடையாகவுள்ளன. மற்றவர்களைப் புரிந்து கொள்ளுதல், விட்டுக்கொடுத்தலிலேயே நேரான நடத்தைகள் வலுப்பெறுகின்றன.

மனவெழுச்சிசார் நுண்மதி மிருது நிலைத்திறன்கள் மூலமும்,
உளவளத்துணை(Counseling),
சாந்த வழிமுறைகள் (Relaxation Techniques) – சுவாசப்பயிற்சி, சாந்தியாசனம்,
தியானம், யோகா, முறைகள் மூலமும்
பிள்ளைகளின் அவலங்களை பிரச்சினைகளை இனங்காணல்,
பகிர்வுகளை மேற்கொள்ளல்,
நம்பிக்கையூட்டல்,
இறைவழிபாட்டில் நாட்டம் செலுத்த வைத்தல்,
சக மாணவர்களுடன் மகிழ்வாக இருக்க சந்தர்ப்பமளித்தல்
கலை நிகழ்வுகள்,
தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்குதல்,

விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபடுத்தி நேரான வகுப்பறை முகாமைத்துவ உத்திகளை நிலைமைக்கு ஏற்ப பிரயோகித்து

மாணவர்களின் வெற்றிகரமான கற்றலுக்கும் உரிய தேர்ச்சிகளை அடைய வைக்கவும் பாடசாலைகள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

## தகவல் தொழில்நுட்பப் பிரயோகம்

எமது பிரதேச பாடசாலைகளின் பின்னடைவுகளுக்கும் அபிவிருத்தி இன்மைகளுக்கும் தகவல் தொழில்நுட்பத்தை பிரயோகிக்காமையே முக்கிய காரணமாகும்.

வேலையை இலகுவாக்குதல், நேர முகாமைத்துவம், இலகுவாகக்கற்றல், தரவுகளைச்சேகரித்தலும் உரிய நேரத்தில் பெறுதலும், ஆசிரியர் இல்லாமலே கற்கக்கூடிய தன்மை, தானாக சுயமாகக்கற்கக்கூடிய தன்மை என பலபயன்கள் தகவல் தொழில்நுட்பப்பிரயோகத்தால் கிடைக்கின்றது.

இப்பயன்களை எமது பெரும்பாலான பாடசாலைகள் பெறவில்லை. மிக விரைவாக பாடசாலை முகாமைத்துவக் குழுக்கள் மாகாணசபை உள்ளூராட்சி மன்றங்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள் அரசியல் வாதிகள் எல்லோரும் பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்பத்தினூடாக மாணவர்கள் கற்கின்ற தேர்ச்சிகளை வழங்க முன்வர வேண்டும்.

எமது பிரதேச கல்விப்பின்னடைவுகளுக்கு இது முக்கிய காரணமாகவுள்ளது. ஆசிரியர்களுடைய மனப்பாங்கிலும் தகவல் தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தலை மேற்கொள்ள பாடசாலை அதிபர்கள் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

ஒரு நாட்டில் பல்வேறு நிறுவனங்களில் பாடசாலை மிக முக்கியமான நிறுவனமாகும். இங்கு தான் ஒரு நாட்டின் தலைவிதி நிர்ணயிக்கப்படுகின்றது.

குறித்த நாட்டின் மனித வளத்தை அந்நாட்டின் தேவை எதிர்பார்ப்பு என்பவற்றிற்கு ஏற்ப உருவாக்கித்தரும் நிறுவனமே பாடசாலையாகும். இதனை சமூகத்தின் கண்ணாடி என்றும் சமூகத்தின் மாதிரி என்றும் கல்வியியலாளர்கள் எடுத்துக் கூறுகின்றனர்.

கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கம் செலவிடுதல் அது நீண்ட முதலீடாகவுமுள்ளது. இதனை எமது பிரதேச அரசியல் வாதிகள் கருத்தில் எடுக்காததால் எமது பாடசாலைகள் பெரும் பின்னடைவுகளைக் கண்டு வருகின்றன.

அத்தோடு பாடசாலை முறையில் பொருத்தமில்லாத தலையீடுகளை அவர்கள் மேற்கொண்டு இடையூறுகளையும் செய்துவரும் நிலை மிகப்பாதகமானது. எனவே கல்வியாளர்கள் புத்திஜீவிகள் எமது பிரதேச அரசியல் வாதிகளுடன் ஆக்கபூர்வமாகக் கலந்துரையாடி எமது பிரதேச பாடசாலைகளை பல்வேறு வகைகளில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தகவல் தொழில் நுட்பத்தினூடு கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்த அவர்களின் நிதி ஒதுக்கீடுகளைப் பெறவேண்டும்.

## பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு

உங்கள் பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புங்கள். அவர்கள் கல்வி மூலமாகவே தமது எதிர்கால நல்வாழ்க்கையை வாழ முடியும்.

பாடசாலையில் கற்பதற்கு பிள்ளைகளைத் தயார்படுத்துவதில் பெற்றோர், பிள்ளை இடைத்தாக்கம் முக்கிய பங்கு வகிக்கின்றது. பாடசாலை ஆசிரியர் வீட்டு வேலைகளை மாணவர்களுக்குக் கிரமமாகக்கொடுக்கும்போது அவைகளைத் காலதாமதமின்றி நிறைவேற்றப் பெற்றோர் வழிப்படுத்த வேண்டும்.

அவர்களுடைய கல்வி உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். கட்டாயக்கல்விச் சட்டம் இதனையே எடுத்தியம்புகின்றது.

கல்வி கற்பது ஒவ்வொரு பிள்ளையினதும் அடிப்படை உரிமையாகும்

**இதற்கு என்ன செய்யலாம்?**

- பிள்ளைகளின் கல்வியில் அக்கறைகொள்ளுதல், அன்பாயிருத்தல்.
- பிள்ளைகளின் பயிற்சிக் கொப்பிகளை அவதானித்து வழிகாட்டல்
- பாடசாலைச் செயற்பாடுகள் பற்றி பிள்ளைகளுடன் கதைத்தல்
- பாடஆசிரியர், வகுப்பாசிரியர், அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடல்
- பாடசாலை மீது நம்பிக்கை வைப்பதுடன் அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளில் தவறாது பங்குகொள்ளல். கல்வி இல்லாமல் வாழ்க்கை இல்லை என்பதை உணர்தல்
- பாடசாலையிலும், வகுப்பறையிலும் பிரயோகிக்கப்படும் புதிய செயற்றிட்டங்கள் தொடர்பாக அறிதல்,

  உ+ம் - பல்மட்டக்கற்பித்தல், நேரான வகுப்பறை முகாமைத்தும்
- சிறுவர் துஸ்பிரயோகங்கள் கலாச்சார சீரழிவிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல்
- குடும்ப வன்முறைகள், போதைப்பொருள் பாவனையைத் தடுத்தல்
- கற்றல் உபகரணங்கள், செயலட்டைகளை உரிய முறையில் பாதுகாத்தல்

இவ்வாறாக உங்கள் பிள்ளைகளின் கல்விக்காக நீங்கள் செயலாற்றுவதால் அவர்களுடைய எதிர்கால வாழ்வு ஒளிபெறுகின்றது.

- கல்வி வருமானத்தைப் பெருக்குகின்றது. உயர் தொழிலைத் தருகின்றது.
- சமூக அந்தஸ்தை ஏற்படுத்துகின்றது.
- வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றது.
- ஆரோக்கியமான வாழ்க்கையைத் தருகின்றது.
- குடும்பம், கிராமம், நாட்டு வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்துகின்றது.

- எம் சிறார்களுக்குக் கல்வி ஒளியைக் கொடுத்து அவர்கள் வாழ்வை உயர்த்துவோம். பாடசாலைகளையும் வீட்டையும் சிறுவர் நேயப்பயிற்சிக் களங்களாக்குவோம்.
- கல்விக் கூடங்களான பாடசாலைகளைக் கடவுளின் கோவில்களாக்குவோம்.

பாடசாலை அபிவிருத்தியில் எம்மாலான பங்களிப்பைப் பெற்றோர்களாகிய நாம் செய்வோம்.

சிரமதானத்தின் மூலமும் உடலுழைப்பின் மூலமும் வகுப்பறைகளையும் பாடசாலையையும் அழகுபடுத்துவோம்.

எமது ஊர்ப்பாடசாலையை சிறப்பாக இயங்க வைப்போம். அதிபர், ஆசிரியர்கள், கல்வித்துறையினர் அர்ப்பண சேவையாற்ற நாம் முன்னின்று உழைப்போம்.

பாடசாலைகளே எதிர்கால நற்பிரசைகளை உருவாக்கும் மையங்கள் எனவே அரசியல்வாதிகள், கல்வியியலாளர்கள், அரசாங்க அதிபர்கள் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள், மதத்தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனத்தினர் என ஊரில் உள்ள அனைவரையும் ஒன்று திரட்டி விழிப்புணர்வூட்டி எம்மூர் பாடசாலை மீது

அக்கறை செலுத்தி தரமான கல்வியை எமது பிள்ளைகளுக்கு வழங்க வழிசெய்வோம்!

கல்விப்பணியே கடவுள் பணி!

கல்வி மூலமாக வறுமையையும், ஏழ்மையையும் விரட்டியடித்து உழைப்பின் மகிமையை எம்மண்ணில் உயர்த்திக் காட்டுவோம்.

## வீட்டுமையக்கல்வி;

"நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்ற வகையில் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை எமது வீட்டில் ஏற்படுத்துவோம். வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்போம்.

~ சமய – சமூக விழுமியங்களைப் பேணி எல்லோரையும் மதிக்க, பிள்ளைகளுக்கு அன்பு காட்டி வழிப்படுத்த முன் மாதிரியாகச் செயலாற்றுவோம்!

~ வீட்டிலுள்ள வசதிகளுக்கு ஏற்ப உயர்ந்த பட்ச கற்றல் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்போம்! பிள்ளை கற்கும்போது அயலவருடன் உரையாடுவதைத் தவிர்ப்போம்!

~ பிள்ளைகளுக்கு உடல் - உள ரீதியான தண்டனைகளை வழங்காதிருப்போம்!

~ பிள்ளைகள் சுதந்திரமாகக் கற்பதற்கு வீட்டில் கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுப்போம்! அதற்கான உதவிகளை வழங்குவோம்! திணிப்புக்களைத் தவிர்ப்போம்!

~ பிள்ளைக்கு முன்னால் சண்டையிடல், துர்வார்த்தை பேசுதலைத் தவிர்ப்போம்.

~ பிள்ளையைப் படிக்கக் கூறிவிட்டு தொலைக்காட்சி பார்ப்பதைத் தவிர்ப்போம்.

~ பிள்ளை கைத்தொலைபேசி, கணினி போன்றவற்றைப் பயன்படுத்தும்போது கண்காணிப்போம்! பொருத்தமில்லாதவற்றைக் கட்டுப்படுத்துவோம்!

~ ஏழைகளுக்கு உதவும் பகிர்ந்து உண்ணவும் பழக்குவோம்!

~ பேற்றோர், பாடசாலை தமிழ் மொழியழன் மீதும் நாட்டின் மீது பற்றுள்ளவர்களாக்குவோம்!

~ பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்களைப் புரிந்து கொண்டு பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

~ பாடசாலைத் தோட்டத்தை விருத்தியாக்கத் தொண்டுகள் புரிவோம்.

~ பிள்ளைகளுடன் இணைந்து வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபடுவோம்.

**மனிதத்துவ விடுதலைக்கான புரட்சிகரக்கருவி – கல்வி**

" அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
ஆன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

***மகாகவி பாரதியார்***

"எழுமின் விழிமின் கருதிய கல்விக் கருமம்
கைகூடும் வரை உழைமின்"

இவ்வகையில் எமது பாடசாலைகள்ள வலுப்படுத்தி எதிர்காலச் சந்ததிகளான இன்றைய மாணவர்களுக்கான தேர்ச்சிகளை வழங்கி புதியதோர் சமுதாயம் படைப்போம்.

***கலாநிதி.பாலசுப்பிரமணியம் தனபாலன்***
*உபபீடாதிபதி*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி*
*thanapalanabi@gmail.com*

நிறை வாழ்வு

ABUNDANT LIFE

# 2017 ஜூன் 12